திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட விஷ்ணுபுரம் என்கிற ஊராட்சியில் சாலை விரிவாக்கத்தின்போது அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட்ட 30 குடும்பங்கள் கரையான்திடல் என்ற பகுதியில் வசித்து வருகின்றன. அவர்களுக்குப் பட்டா வழங்கி, மீள்குடியமர்வு செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவும், அதைப்போல, நன்னிலம் பேரூராட்சியில் 40 ஆண்டுக்காலமாக, அதாவது, குளத்தில். . .*

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. காமராஜ், மீள்குடியமர்த்துவது குறித்துதானே! அது பதிவாகிவிட்டது. சரி. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், திரு. காமராஜ், நீங்கள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துவிட்டீர்கள், போதும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மேலும், உங்கள் கட்சியைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்கள் கேள்வி கேட்க இருக்கிறார்கள். ஆகவே, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் கேள்வி கேட்டது போதும். உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி நீங்கள் கேள்வி கேட்கிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) சாலை அமைக்கப்பட்டபோது, இடத்தைக் காலி செய்த நபர்களுக்கு மீள்குடியமர்வு பற்றிச் சொன்னீர்கள். அது பதிவாகிவிட்டது. (குறுக்கீடு) ஒரே ஒரு கேள்விதான். அதுவும் பதிவாகிவிட்டது.*

(இ) தமிழ்நாட்டில் மத்திய அரசுப் பணிகளுக்கு வடமாநிலத்தவர் போலிச் சான்றிதழ் பெற்று பணியில் சேர்ந்துள்ளது மற்றும் கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் இந்தியில் தேர்வு நடத்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, நீங்கள் கேள்வி கேட்கிறீர்களா அல்லது வேறு உறுப்பினரை அழைக்கட்டுமா?*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தொடர் வண்டித் துறை, அஞ்சல் துறை, வங்கிகள் போன்றவற்றில் போலிச் சான்றிதழ்களைப் பெற்று, வட மாநிலங்களைச் சேர்ந்தவர்களெல்லாம் பணியில் சேர்ந்திருக்கிறார்கள். இதுகுறித்து ஆய்வு செய்யப்பட்டு, 300-க்கும் மேற்பட்டவர்கள் கண்டறியப்பட்டிருக்கிறார்கள். எனவே, போலிச் சான்றிதழ் பெற்றவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

தமிழர்களுக்கான வேலைவாய்ப்பு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதோடு, கல்பாக்கம் அணு மின் நிலையத்தில். . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, உங்கள் கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துவிட்டது. போதும், Please. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர், உங்கள் கருத்தை நீங்கள் பதிவு செய்துவிட்டீர்கள். போதும், உட்காருங்கள். (குறுக்கீடு) சரி, ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் Plumber முதல் கடைநிலை பணி வரைக்கும் இந்தியில் தான் தேர்வு எழுத வேண்டும் என்றுள்ளது. இந்தியில் தான் நேர்காணல் நடக்கிறது. இதனால் தமிழ்நாட்டில் இருக்கின்றவர்களுக்கு வேலைவாய்ப்பில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, அரசின் கவனத்தை ஈர்த்து விட்டீர்கள். (குறுக்கீடு) போதும், உட்காருங்கள்.*

(ஈ) செங்கல் சூளை மற்றும் மண்பாண்டம் செய்பவர்களுக்கு மணல் எடுக்க அனுமதி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. தளவாய் சுந்தரம், ஒரு வரியில் சொல்லி முடியுங்கள்.*

திரு. ந. தளவாய் சுந்தரம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நீர் வளத் துறை அமைச்சர் அவர்கள் இன்றையதினம் ஓர் உத்தரவினைத் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, செங்கல் சூளை மற்றும் மண்பாண்ட சூளைகளுக்கு மணல் எடுக்க அனுமதி தருவதாக நேற்றையதினம் சொன்னீர்கள். அதுசம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்கள், நீங்கள் இதற்குப் பதில் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) சரி சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தளவாய் சுந்தரத்திற்கு மறதியா? அன்றைக்கு நான் clean ஆக பதில் சொல்லியிருக்கிறேன்.*